(2) நடைமுறைக் கேள்வி

(அ) அவையுரிமைப் பிரச்சினையைக் கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக எடுத்துக்கொள்வது குறித்து.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, on a point of order. Under Rule 186, 'a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon :

Provided that a matter of privilege arising........................ during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.'

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவைத் தலைவரிடம் இரண்டு உரிமைப் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறேன், நம்முடைய விதிமுறைகளின்படி, ஒன்று 'நவமணி' பத்திரிகையின்மீது. இரண்டாவது, 'முதலமைச்சர்' மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அதைப்பற்றி நான் சொல்கிறேன், வேறல்ல. உரிமைப் பிரச்னைகளைத் தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். கேள்விகள் முடிந்து, மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் உரிமைப் பிரச்னையைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நீங்கள் தீர்ப்பு சொல்ல ஆரம்பித்தீர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இது முன்னால் எழுப்பப் பட்ட பிரச்னையின் மீதான தீர்ப்பு.

(3) அவையுரிமைப் பிரச்சினைகள்.

(அ) அறநிலையத் துறை அமைச்சர் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்ததாகக் கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் இப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். 21—11—1973

1973 டிசம்பர் 1] [பேரவைத் தலைவர்]

அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் விடுத்த துணை வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விடையில்—

"நீலகிரி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. ஒரு முறை பால் கெட்டு விட்டது என்ற காரணத்தினால்தான் அழிக்கப்பட்டது. வேறு எந்தவிதமான புகாரும் அரசாங்கத்திற்கு வரவில்லை . . ."

என்று குறிப்பிட்டது தவறானது என்றும், அதனால் அது அவை உரிமையை மீறிய செயல் என்றும் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியுள்ளார். மேலும், அவர் கூறுகையில் அவருக்கு முன்பு அளிக்கப்பட்ட ஒரு விடையில்—

"நாளொன்றுக்கு 4,300 லிட்டர் ஆடை நீக்கப்பட்ட, திரிந்து போன, அருந்துவதற்கு முழுமையாகப் பயன்படாமல் போன பால் மட்டும், 13—11—1971 முதல் 21—11—1971 வரை, உதகை கூட்டுறவு பால் விநியோகச் சங்கத்தால் தள்ளப்பட்டது."

என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி உள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில், 15—1—1973 அன்று ஊட்டி கூட்டுறவு பால் விநியோகச் சங்கத்திலிருந்து டாங்கரில் சாலை வழியாக ஈரோட்டிற்கு அனுப்பப்பட்ட 4,450 லிட்டர் பால் ஈரோட்டிற்கு வந்து பார்க்கையில் கெட்டிருந்ததாகவும் அதனால் அது அழிக்கப்பட்டதாகவும், அதனை மனதில் கொண்டு தம் விடையில் "ஒரு முறை அவ்வாறு நேர்ந்தது" என்று குறிப்பிட்டதாகக் கூறினர். மேலும் திரு. லத்தீப் அவர்களது வினாவில் எந்தக் காலத்தில் நடைபெற்றது என்று குறிப்பிடாததால் தம் விடையில் தவறு இல்லை என்றும், அதனால் தாம் அவையில் தவருன தகவலைத் தரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. லத்தீப் அவர்களின் வினா பின்வருமாறு உள்ளது—

"தற்போது பால் பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் என்று அழிக்கப்பட்டு வந்தது என்று பத்திரிகையில் செய்தி

வந்ததே. அந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள பாலையாவது பவுடராக ஆக்க அங்கே பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க முன்வருவார்களா ?"

டாக்டர் ஹாண்டே அவர்கள் தமக்கு முதலில் அளிக்கப் பட்டதாக கூறப்படும் விடையில் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி நடந்தது 13—11—1971 முதல் 21—11—1971 வரை. தற்போது நடந்ததாக அமைச்சர் அவர்கள் கூறுவது 15—1—1973-ல். திரு. லத்தீப் அவர்கள், 1971-ம் ஆண்டு—இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்—நடந்த நிகழ்ச்சியை நினைவில் கொண்டு தம் துணைக் கேள்வியை கேட்டிருப்பார் என்று கருதுவதற்கில்லை. 1973-ம் ஆண்டு ஜனவரியில் நடந்த நிகழ்ச்சியைத் தான் அவர் கேட்டிருக்க வேண்டும். எனவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடை பொருத்தமானது, சரியானதும் ஆகும். மேலும், பேரவைக்கு 1971-ல் தானே அளித்த ஒரு விடையை மறுக்க வேண்டிய அவசியமும் அமைச்சருக்கு இல்லை. எனவே, இதில் அமைச்சர் தவறான தகவல்களைக் கொடுத்தார் என்பது சரியல்ல.

அவைக்கு வேண்டுமென்றே, தவறு என்று தெரிந்தும், அந்தத் தகவலை அளித்தால் அது அவையுரிமையை மீறிய செயலாகும் என்பதுதான் நமது அவையிலும், நாடாளு மன்றத்திலும் பல முறை கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பாகும். இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாம் அவைக்குக் கொடுத்த தகவல் தவறான தல்ல என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இதில் அவை உரிமை மீறல் நிகழ்ச்சி எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இணைக்கப்பட் டுள்ள முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைக் களங்கப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒரு உரிமைப் பிரச்னை.

The Hon. Member Thiru K. T. K. Thangamani has raised a matter of breach of privilege on the ground that in the reply to the rejoinder submitted to the Prime Minister of India by